[திரு. ஆர். வைத்திலிங்கம்] [2014 ஜூலை 10

தீர்மானம் அதுபற்றிதான் வருகிறது. நீங்கள் பேசுங்கள். நான் பதில் சொல்கிறேன். அமைதியாக இருந்து கேளுங்கள், நான் அமைதியாக பதில் சொல்கிறேன். அவர்கள் ஓடுகிறவர்கள்; ஓடிட்டாங்க. தைரியமிருந்தால் அந்த ஓடுகிறவர்கள் என் பதிலுக்கு பதில் சொல்ல வேண்டும். அந்த ஓடுகிறவர்களுக்குத் தைரியமில்லை. அதனால் அவர்கள் புறமுதுகிட்டு ஓடிவிட்டார்கள். நீங்கள் உட்கார்ந்து அமைதியாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாகக் கேளுங்கள், நான் பொறுமையாக, நியாயமாகப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) பொறுமையாகக் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், விதியில் இடமில்லை. இதை அனுமதிப்பதற்கு விதியின்படி வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, விதியில் வாய்ப்பில்லை. அனுமதி கொடுப்பதற்கு விதியின்படி எனக்கு வாய்ப்பில்லை. விதியின்படி வாய்ப்பில்லாததால், நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, அனுமதி கொடுப்பதற்கு விதிப்படி எனக்கு வாய்ப்பில்லை.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

5. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 2014—2015, முன்மொழிதல் (ஆ.பெ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014–2015 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து பின்வரும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the Financial Year 2014–2015."